# மனிதன் "இல்லை" என்று கூறும்பொழுது தேவன் "ஆம்" என்று கூறுகின்றார் (5:12-42)

*கடந்த பல ஆண்டுகளாக, கிறிஸ்தவத்தை அழிப்பதற்குச் சர்வாதிகார அரசாங்கங்கள் முயற்சி செய்திருக்கின்றன. கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில், ரோமாபுரி அரசாங் கத்தின் வல்லமை, சபைக்கு எதிராகத் திருப்பி விடப்பட்டது. சமீபகால வரலாற்றில், கம்யூனிசமானது கிறிஸ்தவத்தின் செல்வாக்கை ஒன்றுமற்றதாக்குவதற்குக் கடினமாகப் பிரயாசப் பட்டது. இயேசுவோ அல்லது அவருடைய அப்போஸ்தலர் களோ புரட்சியாளர்கள்[1] அல்ல என்பதை இந்த அமைப்புகளின் தலைவர்கள் உணரத் தவறினர்!*

*பொதுவாக மேற்கத்திய உலகிலும், குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டிலும், கிறிஸ்தவத்தை நாம் ஜனநாயகத்தோடு சமமாக வைக்கிறோம், ஆனால் எந்த வகையான ஒரு அரசாங்க அமைப்பு முறையின் மேலும், இயேசு தமது அங்கீகாரத்தின் முத்திரையை இடவில்லை. அடக்குமுறை அமைப்பின்கீழ் இருப்பதைக் காட்டிலும், சுதந்திரமான அமைப்பின்கீழ் நமது மார்க்கத்தை நடைமுறைப் படுத்துவது சுலபமாய் உள்ளது, ஆனால் அரசாங்கம் எவ்வகையாயிருப்பினும், அதற்கு நாம் நல்ல குடிமக்களாயிருக்க வேண்டும் என்றுதான் வேதாகமம் நமக்குப் போதிக்கின்றது. பவுல் பின்வருமாறு எழுதுகையில், ரோமாபுரி இவ்வுலகத்தைத் தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்தது, கொடிய சர்வாதிகாரியான நீரோ இராயன் அதன் அரியணையில் இருந்தான்:*

*எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை, உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிறவன்மேல் கோபக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே, ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 13:1-5).*

*“தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது”* என்ற வாக்கியத்தைக் கவனியுங்கள். ஒவ்வொரு அரசாங்கமும் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்றும், அது தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறது என்றும் இது பொருள்படாது.[2] நீண்ட நாட்களுக்கு முன்பு, மனித குலத்தின் நன்மைக்காக தேவன் மக்களின் அரசாங்கத்தை அறிமுகப் படுத்தினார் என்றே இது பொருள்படும். மக்களின் அரசாங்கம் இல்லையேல், அராஜகமும், பெருங்குழப்பமும் ஆளுகை புரியும். இதற்கு விதிவிலக்குகள் இருக்கலாம், ஆனால் பொது விதியாக, ஒவ்வொரு அரசாங்கமும் (அது எவ்வளவோ அநீதியானதாய் இருந்தாலும்), சட்டங்களைப் பின்பற்றுவோருக்கு வெகுமதிகளையும், அவைகளை மீறுவோருக்குத் தண்டனையையும் அளிக்கின்றன.

அரசாங்கத்தைப் பொருத்தமட்டில், நமது கடமைகளை மூன்று வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறலாம் - செலுத்துங்கள்,

ஜெபியுங்கள், கீழ்ப்படியுங்கள் (pay, pray and obey): *(1)* நாம் வரியைச் செலுத்த வேண்டும். இதை மத். 22:17-21ல் இயேசு தெளிவாக்கியுள்ளார், பவுலும் இதை ரோமர் 13:6, 7ல்[3] மறுபடியும் வலியுறுத்தியுள்ளார். (2) அரசாங்கத்தின் எல்லா அதிகாரிகளுக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும் (1 தீமோ. 2:1, 2). (3) நாம், நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். பவுலின் தெளிவான உபதேசத்தோடு கூட, பேதுருவும், "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள், மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ் சரி, ... அதிகாரிகளுக்கானாலுஞ்சரி கீழ்ப்படியுங்கள் ... இது தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 பேது. 2:13-15) என்று குறிப்பிட்டார். மேலும் உண்மையான கீழ்ப்படிதல் என்பது கனம் பண்ணுதலையும் உள்ளடக்கியுள்ளது என்றும் பேதுரு குறிப்பிட்டார். அவர், "ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்று கூறினார் (1 பேது. 2:17). சில மொழிபெயர்ப்புகள் "கனம் பண்ணுதல்" என்பதை "மரியாதை செலுத்துதல்"[4] என்று பெற்றுள்ளன. "ஆனால் அரசாங்கத்தின் தலைவர் எனது மரியாதையைப் பெறத் தகுதியற்றவராயிருந்தால் என்ன செய்வது?" என்று சிலர் எதிர்க்கலாம். பேதுருவால் பேசப்பட்ட "ராஜா", நீரோ என்பதை நினைவில் வையுங்கள். அந்த நபருக்கு நீங்கள் மரியாதை அளிக்காவிட்டால், அந்நபரின் பதவிக்கு மரியாதை அளியுங்கள்.

நமது தற்போதைய பாடத்திற்கு, புதிய ஏற்பாட்டின் அடிப்படை உபதேசம் ஒரு பின்னணியாகப் பயன்படுகிறது. இந்தப் பாடத்தில், சில கேள்விகளை நாம் பரிசோதிக்க விரும்புகின்றோம்: நாட்டின் சட்டத்திற்கு நாம் கீழ்ப்படியக் கூடாத நேரம் என்று ஒன்று உள்ளதா? அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு சில வேளைகளில் நாம் கீழ்ப்படியக் கூடாதென்றால், மற்ற வேளைகளில் நாம் எவ்விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்? நமது வசனப்பகுதியாகிய 5:12-42ஐத் திருப்புகையில், மேற்கூறிய சிந்தனைகளை உங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

சப்பாணியாயிருந்த பிச்சைக்காரனைக் குணப்படுத்திய பிறகு, பேதுருவும் யோவானும் கைது செய்யப்பட்டபோது, சனதெரீன் சங்கத்தார், "இயேசுவின் நாமத்தைக் குறித்து

எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக் குக் கட்டளையிட்டார்கள்" (4:18). அதற்கு அப்போஸ்தலர்கள் ஆலோசனை சங்கத்தாரிடம், தேவனுக்குச் செவி கொடுக்கிற தைப் பார்க்கிலும், அவர்களுக்குச் செவி கொடுக்கிறது நியாயமாயிருக்குமோ? என்று கேட்டார்கள் (வ. 19), மேலும் அவர்கள், "தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்" (வ. 31). இவ்விதமாய் இப்பாடம் தொடங்குகின்றது....

> ... அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப் பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள். மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள். திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (5:12-14).

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், எந்தச் செயலினால் முதலில் பேதுருவும் யோவானும் உபத்திரவமடைந்தார்களோ, அந்தச் செயலையே அப்போஸ்தலர்கள் மிகவும் சரியாகச் செய்து கொண்டிருந்தனர்.

## பொது மக்களிடையே மதிப்பு (5:15, 16)

வசனம் 15 மற்றும் 16ல் அப்போஸ்தலர்களின் வல்லமையும், பொது மக்களிடையே அவர்களுக்கு ஏற்பட்டிருந்த மதிப்பும் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளன:

> ... பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.

*அப்போஸ்தலர்களின் மதிப்பு பரவியபோது, எல்லாப் பக்கங்களிலுமிருந்து மக்கள் தங்களிடையே இருந்த பிணியாளிகள் மற்றும் அசுத்த ஆவியால் வாதிக்கப்பட்டவர்கள்[5] ஆகியோரைக் கொண்டு வரத் தொடங்கினர். அப்போஸ்தலர்களும் மற்ற கிறிஸ்தவர்களும் இருந்த இடத்தில் அவர்கள் யாவரும் வர முடியாதபடி கூட்டம் அதிகமாயிருந்தபடியால், "பேதுரு நடந்துபோகையில்[6] அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படி" (வ. 15) அப்போஸ்தலர்கள் செல்லும் பாதைகளில் வரிசையாக நின்றனர். பேதுருவின் நிழல் யாருக்கேனும் உதவியதா என்று நான் அறியவில்லை. ஒருமுறை இயேசுவினுடைய வஸ்திரத்தின் ஓரம் இவ்வித உதவி புரிந்தது (மத். 9:20-22; 14:36), மற்றும் வேறொரு முறை, பவுலின் சரீரத்திலிருந்த உறுமால்கள் மற்றும் கச்சைகள் சிலரைக் குணப்படுத்த உதவின (19:11, 12). ஒருவேளை, மக்கள் பிணியாளிகளை அங்கே விட்டு வைப்பதே அவர்களுக்கு நன்மை அளிக்கும் என்று எண்ணியிருக்கலாம்[7] - பிறகு, அப்போஸ்தலர்கள் அவ்வழியே வரு ம்போது, அவர்கள் நின்று வேறு முறைகளில் அவர்களைக் குணப்படுத்தியிருப்பார்கள். அது எப்படி நடைபெற்றிருப்பினும், பிணியாளிகள் மற்றும் வாதிக்கப்பட்ட அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டனர். இன்றைய நாட்களில் "குணமளிக்கும் கூட்டங்கள்" முடிந்த பிறகு உடல் ஊனமுற்றவர்கள் இருதயம் உடைந்த நிலையில், தங்கள் காதுகளில் "உன்னிடத்தில் போதிய அளவு விசுவாசம் இல்லை!" என்ற வார்த்தைகள் ரீங்காரமிட, வெளிச் செல்லுவதை அடிக்கடி நாம் காணுகின்றோம். இவைகள் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் நடந்தவைகளுக்கு முரண்பாடாய் உள்ளன. இயேசுவும் அப்போஸ்தலர்களும் தங்களின் குணமாக்கும் வரங்களைப் பயன்படுத்தியபோது, அவர்கள் தோல்வியடையவில்லை.*

*ஒவ்வொரு அற்புதமும் "இயேசுவின் நாமத்தினாலேயே" நிகழ்த்தப் பெற்றது (3:6, 16; 4:10), மற்றும் ஒவ்வொரு பிரசங்கமும், "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் ... அவருடைய நாமமே கட்டளையிடப்பட்டுள்ளது" (4:12) என்பதை அறிவித்தன. அப்போஸ்தலர்களின் மதிப்பு வளர்ந்ததும், அத்துடன் அவர்கள் சனதெரீன் சங்கத்தின் பிரகடனத்*

திற்குக் கீழ்ப்படியாமல் போன துணிவும் இணைந்து அவர்களை மறுபடியும் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பு நிறுத்த வைத்தன.

## சிறைச்சாலை (5:17, 18)

"அப்பொழுது பிரதான ஆசாரியனும்[8] அவனுடனேகூட இருந்த சதுசேய[9] சமயத்தா[10]ரனைவரும் எழும்பி, பொறாமையினால்[11] நிறைந்து, அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்" (வ. 17, 18). இந்த வேளையில் பேதுருவும் யோவானும் மட்டுமல்லாது, எல்லா அப்போஸ்தலர்களும் சிறைச்சாலையில் வைக்கப்பட்டனர். மூல பாஷையில் "பொதுவான சிறைச்சாலையில் அவர்களை வைத்தார்கள்" என்பது சொல்லுக்குச் சொல் "வெளிப்படையாக அவர்களைக் காவலில் வைத்தார்கள்" என்று பொருள்படும். அப்போஸ்தலர்களை வெளிப்படையாகக் கைது செய்து, அவர்களைக் குற்றவாளிகளைப்போலப் பொதுவான சிறையில் வைத்து அதன்மூலம் அவர்களை அவகீர்த்தியடையப்பண்ண அவர்கள் முயற்சி செய்தனர்.

## அதிகாரத்தோடு அறிவித்தல் (5:19-21அ)

தேவன் வேறு திட்டங்கள் வைத்திருந்தார். "கர்த்தருடைய தூதன்[12] இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அப்போஸ்தலர்களை விடுவித்தான்" (வ. 19அ). வாசல்களைக் காக்கிறவர்கள் அறியாமல் இது எவ்விதம் நிறைவேற்றப்பட்டதென்று நமக்குக் கூறப்படவில்லை. ஒருவேளை அதிகாரம் 12ல் பேதுரு விடுவிக்கப்பட்டதன் விபரங்கள் போலவே இதுவும் இருக்கலாம்.

அவர்களின் சுயபாதுகாப்பிற்காகக் கர்த்தருடைய தூதன் அவர்களை விடுதலையாக்கவில்லை, ஆனால் இரட்சிப்பின் செய்தியானது தொடர்ந்து பிரசங்கிக்கப்படுவதை உறுதியாக்கவே அவர்களை விடுதலையாக்கினான். ... அவர்களை வெளியே கொண்டு வந்து: "நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்" என்றான் (வ. 19ஆ, 20).[13] "இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும்" என்பது ஆவிக்குரிய வாழ்க்

*கையின் ஊற்றாகிய இயேசுவைப்பற்றிப் பேசும் ஒரு உருவக நடையாகும் (யோவா. 1:4; 6:68; 14:6) மற்றும் நாம் கிறிஸ்துவுக்குள் பெறுகின்ற வாழ்க்கையையும் இது குறிக்கின்றது!*

*ஏறக்குறைய சூரிய உதய நேரத்தின்போது அப்போஸ்தலர்கள் விடுவிக்கப்பட்டனர். எருசலேமின் சிறையில் அடைக்கப்பட்டு, ஓரிரவை அங்கு நான் செலவிட்டிருந்தால், நன்றாகக் குளித்து, உடைமாற்றி, தூங்குவதற்கு அமைதியான இடம் ஒன்றை நான் நாடியிருப்பேன். ஆயினும், அப்போஸ்தலர்கள் கர்த்தரிடமிருந்து ஒரு கட்டளையைப் பெற்றிருந்தனர். நகரத்தில் அவர்களுக்கு மிகுந்த அபாயத்தை விளைவிக்கும் இடத்திற்குச் செல்லவும், தங்களுடைய அபாயம் விளைவிக்கும் செயலில் ஈடுபடவும், அவர்கள் சற்றும் நேரத்தைக் கடத்தாமல் சுறுசுறுப்பாகச் செயல்பட்டனர்! "அவர்கள் அதைக்கேட்டு, அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம் பண்ணினார்கள்" (வ. 21அ).*

## *பெரும் பயம் (5:21ஆ-25)*

*அப்போஸ்தலர்கள் யாவரும் தேவாலயத்திற்குச் சென்றுகொண்டிருக்க, பிரதான ஆசாரியரும் அவருடன் இருந்தவர்களும் ஒன்றுகூடி ஒரு யுத்த ஆலோசனையில் ஈடுபட்டனர். இந்தச் சூழ்நிலையில் ஒரு நகைச்சுவை உணர்வின் சாரம் இருப்பதைக் காணலாம்: இயேசுவைப்பற்றிப் பிரசங்கிப்பதற்கு ஒரு முடிவைக் கொண்டு வருவது எப்படி என்று முடிவு செய்ய ஆலோசனைச் சங்கத்தார் கூடிய அதே வேளையில், அவர்கள் கைது செய்திருந்த மனிதர்கள் சில நூறு அடிகள் தொலைவில் இயேசுவைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தனர்!*

*"பிரதான ஆசாரியனும் அவனுடனே கூட இருந்தவர்களும் வந்து, ஆலோசனைச் சங்கத்தாரையும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்[14] எல்லாரையும் வரவழைத்து, அப்போஸ்தலர்களைக் கொண்டுவரும்படி சிறைச்சாலைக்குச் சேவகரை அனுப்பினார்கள்" (வ. 21ஆ). பலஸ்தீனத்தில் மிகுந்த பலம் கொண்ட ஒரு அமைப்பானது ஒரு பெரிய அதிர்ச்சிக்குள்ளாகியது.*

> சேவகர்[15] போய், சிறைச்சாலையிலே அவர்களைக் காணாமல், திரும்பி வந்து: சிறைச்சாலை மிகுந்த

*பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்தபொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள் (வ. 22, 23).*

*அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, என்ன நடந்தது என்று ஆச்சரியப்படுவதை நீங்கள் காண விரும்பவில்லையா? "இந்தச் செய்தியை ஆசாரியனும் தேவாலயத்தைக் காக்கிற சேனைத் தலைவனும் பிரதான ஆசாரியர்களும் கேட்ட பொழுது, இதென்னமாய் முடியுமோ என்று, அவர்களைக் குறித்துக் கலக்கமடைந்தார்கள்!" (வ. 24). அவர்கள் அநேக கேள்விகளால் குழப்பமடைந்தனர்: ஒருவரும் அறியாதபடி தப்பித்துச் செல்லமுடிந்த இந்த மனிதர்கள் எத்தகையவர்கள்? அவர்கள் எப்படித் தப்பித்தனர் (தேவாலயத்துச் சேவகர்களில் யாரேனும் அல்லது சனதெரீன் சங்கத்தில் இருந்தவர்களில் கூட எவரேனும் அவர்களுக்கு இரக்கம் காட்டியிருக்கக் கூடுமோ)? இப்பொழுது அவர்கள் எங்கே இருக்கின்றனர்? இவை எல்லாவற்றிற்கும் மேலாக, "இதிலிருந்து என்ன உண்டாகும்." இதென்னமாய் முடியும்?*

*அவர்கள் பதில்கள் பெற இடர்ப்பாடு அடைந்து கொண்டிருக்கையில், அப்பொழுது ஒருவன் வந்து: "இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணுகிறார்கள்" என்று அவர்களுக்கு அறிவித்தான் (வ. 25). அவர்கள் அநேகமாய் அவர்களின் காதுகளையே நம்ப முடியாமல் இருந்திருக்கும். அப்போஸ்தலர்கள் நகரத்தை விட்டு வெளியேறுவதற்காகவே தப்பித்திருப்பார்கள் என்று அவர்கள் யூகித்திருப்பார்கள். ஆனால் அவர்கள் கூடியிருந்த இடத்திலிருந்து கல்லெறி தூரத்தில் அம்மனிதர்கள் இருந்துகொண்டு - செய்யக் கூடாதென்று அவர்கள் கட்டளையிட்டதைச் செய்து கொண்டிருந்தனர்!*

## *பரிவு காட்டுதல் (5:26)*

*ஆலோசனைச் சங்கத்தார் தேவாலயத்துச் சேவகரிடம் உடனடியாக அப்போஸ்தலர்களை மறுபடியும் பிடித்து வரும்படிக் கட்டளையிட்டனர். மறுபடியும் காட்சியில் நகைச்சுவை*

உணர்வு மிளிர்கிறது: “உடனே சேனைத் தலைவன் சேவக ரோடே கூடப் போய், ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்ததினால், பலவந்தம்[16] பண்ணாமல் அவர்களை அழைத்துக் கொண்டு வந்தான்” (வ. 26). சேனைத் தலைவன் பயந்திருந்ததை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. அவர் கைது செய்ய வேண்டியிருந்த மனிதர்கள் சப்பாணிகளை நடக்கவும், அசுத்த ஆவிகளைத் துரத்தவும் முடிந்திருந்தது! மேலும் அவர்கள் யாருமே அறியாத வகையில் அதிகபட்சக் காவலில் இருந்து தப்பிக்க முடிந்திருந்தது! அத்துடன், மக்கள் அவர்களைப் பாராட்டினர். அவர் பேதுருவிடம், “உங்கள் உதவி எனக்குத் தேவை. உங்களைக் கொண்டுவரும்படி நாங்கள் கட்டளை பெற்றுள்ளோம். நாங்கள் இதைச் செய்யவில்லையென்றால் தண்டனை பெற வேண்டியிருக்கும். ஆனால் நாங்கள் இதைச் செய்ய முயன்றாலோ, சூழ்நிலை மோசமாகக் கூடும்! உண்மை யில், நான் யோசனைகளுக்குத் திறந்தமனமுள்ளவனாயிருக் கிறேன்!” என்று மென்குரலில் பேசுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. பேதுரு புன்னகைத்தவாறே, “ஒன்றும் பிரச்சனையில்லை! நாங்கள் உங்களுடன் வருகிறோம்” என்று கூறுவதையும் நான் காண்கிறேன். அந்த வார்த்தைகளை அவர் மற்ற அப்போஸ்தலர்களிடம் கூறவும், அவர்கள் அமைதியற்ற அந்தக் கூட்டத்தின் நடுவாக, ஆயுத பாணியான சேவகர்களின் பின்னால் அமைதியாகச் சென்றனர்.

“பலவந்தம் பண்ணாமல்” என்ற வார்த்தைகளை உங்கள் வசனப் பகுதியில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். அப்போஸ் தலர்கள், அதிகாரிகளை எதிர்த்திருக்க முடியும், இவ்விதமாய் அவர்கள் தங்களைப் பலவந்தம் பண்ணும்படித் தூண்டியிருக்க முடியும். சுலபமாக அவர்கள் ஒரு கலகத்தையும் புரட்சியையும் தொடங்கியிருக்க முடியும். அவர்களிடமிருந்து ஒரு வார்த்தை புறப்பட்டிருந்தால், தேவாலயத்துச் சேவகர்கள் கற்குவியலினடி யில் புதையுண்டிருப்பார்கள். அவர்கள் இடர்ப்பாட்டுக்குக் காரணமாயிருப்பதைத் தேர்ந்து கொள்ளவில்லை. ஏன்? ஏனென்றால், “வையப்படும்போது பதில் வையாமலும், பாடு படும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக் கொடுத்த” (1 பேது. 2:23) ஒருவருடைய சீஷர்களாய் அவர்கள் இருந்தனர். இயேசு கைது

செய்யப்பட்டபோது, எதிர்த்து நிற்கவில்லை.[17] நடபடிகளின் புத்தகத்தில், அப்போஸ்தலர்கள் கைது செய்யப்பட்ட வேளைகள் யாவற்றிலும் அவர்கள் எதிர்த்து நிற்கவில்லை. தேவன் அவர்களை சிறைச்சாலைக்குள்ளும், சிறைச்சாலைக்கு வெளியிலும் பயன் படுத்த முடியும்.

## அழுத்தம் (5:27, 28)

கைது செய்த குழு அறையை நெருங்கிற்று. "அப்படி அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, ஆலோசனைச் சங்கத் துக்கு முன்பாக நிறுத்தினார்கள்" (வ. 27அ). அப்போஸ்தலர்கள், யாராலும் காணக்கூடாதபடித் தப்பித்தது எப்படி என்பது உட்படப் பல கேள்விகளை ஆலோசனைச் சங்கத்தார் கேட்டிருக்க முடியும். ஆனால் நிச்சயமாகவே அப்படிக் கேட்கப்படவில்லை. அவர்கள் சந்தேகப்பட்டிருக்கலாம் ஆனால் தங்கள் சந்தேகம் உறுதிப்படுத்தப்படுவதை அவர்கள் விரும்பில்லை.

மாறாக, கோபமடைந்த ஒரு பிரதான ஆசாரியர், பேதுருவுக்கும் யோவானுக்கும் கொடுக்கப்பட்டிருந்த பிரகடனத்தை அவர்கள் மீறியதற்காக அவர்களைக் கடிந்து கொண்டார்.

> அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி: நீங்கள் அந்த நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணக் கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப் பழியை எங்கள்மேல் சுமத்த வேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான் (வ. 27ஆ, 28).

இரு குற்றச்சாட்டுகள் அவர்களுக்கெதிராகக் கொண்டு வரப்பட்டன:

(1) இயேசுவின் நாமத்தைக் குறித்துப் போதிக்கக் கூடாது என்று ஆலோசனை சங்கத்தார், அவர்களுக்குக் கண்டிப்பான கட்டளையிட்டிருந்தனர், ஆனால் இதற்கு மாறாக, அப்போஸ் தலர்கள் தங்கள் போதகத்தினால் எருசலேமை நிறைத் திருந்தனர்! இயேசுவின் நாமமானது ஒவ்வொரு நாவிலும்

*இருந்தது! ஆலோசனை சங்கத்தின் உறுப்பினர்கள் இயேசுவின் நாமத்தைக் குறித்து அவதிப்பட்டனர்! அப்போஸ்தலர்களுக்கு இது எப்படிப்பட்ட பாராட்டுதலாகிறது! சபை வளர்ச்சியின் முக்கியமான "இரகசியங்களில்" இது ஒன்றாகும்: அதிகமாய் விதைக்கும் போது, அதிகமாய் அறுவடையாகிறது! இன்றைய நாட்களில் இயேசுவின் போதகத்தினால் இந்த உலகத்தை ... அல்லது நமது நாட்டை ... அல்லது நமது மாநிலத்தை ... அல்லது நமது நகரத்தையாவது நிறைத்தோம் என்று சொல்லப்பட முடியுமென்றால் அது எனக்கு எவ்வளவு விருப்பமானதாய் உள்ளது!*

*(2) அப்போஸ்தலர்கள், இயேசுவின் மரணத்திற்கு அங்கிருந்தவர்களைப் பொறுப்பாளிகளாக்கினார்கள் என்பது இரண்டாவது குற்றச்சாட்டாயிருந்தது: "அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்த வேண்டுமென்றிருக்கிறீர்கள்." பிலாத்து, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்ற போது, அவர்கள் யாவரும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று சத்தமிட்டிருந்தனர் (மத். 27:24, 25). அவர்களுடைய கூற்றின் படி அவர்களை அப்போஸ்தலர்கள் நிலைநிறுத்துகையில், அவர்கள் மனம் புண்பட்டனர்![18]*

*இயேசுவினுடைய பெயரைக்கூடச் சொல்லாத அளவுக்குப் பிரதான ஆசாரியன் இயேசுவின்மேல் அவ்வளவாய் வெறுப்படைந்திருந்தார்: "நீங்கள் அந்த நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா; ... அந்த மனிதனுடைய இரத்தப் பழியை எங்கள்மேல் சுமத்த வேண்டுமென்றிருக்கிறீர்கள்...."*

## *முன்னுரிமைகள் (5:29)*

*மீண்டுமொருமுறை அப்போஸ்தலர்கள்மேல் அழுத்தம் - நம்பமுடியாத அளவுக்கு அழுத்தம் - செலுத்தப்பட்டது. அவர்கள் பலமாக நின்றார்களா அல்லது சறுக்கி விழுந்தார்களா?*

அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷ

ருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப் படிகிறதே அவசியமாயிருக்கிறது. நீங்கள் மரத்திலே[19] தூக்கிக் கொலை செய்த இயேசுவை[20] நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு[21] மனந் திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும்,[22] இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத்[23] தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள் (வ. 29-32).

பேதுருவும் மற்றவர்களும் இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்கள்: ஆம், அவர்கள் இயேசுவுக்குச் சாட்சி பகர்ந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். ஆம், இயேசுவை சனதெரீன் சங்கத்தார் கொலை செய்ததாகக் கூறியதாய் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். உண்மை யில், அவர்கள், "நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை ..." என்று சனதெரீன் சங்கத்தாரின் முன் கூறு வதற்குத் தயங்கவில்லை.

ஏன் அவர்கள் இவ்வளவாய்ப் பயமின்றிப் பேசினார்கள்? ஏனென்றால் அவர்கள் ஆவிக்குரிய வகையில் சில முன்னுரிமை களை வைத்திருந்தனர். முந்திய விசாரணையில், பேதுருவும் யோவானும் தங்கள் முன்னுரிமைகளை மறைமுகமாக நிலைநாட்டினர்: "தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்" (4:19). இப்பொழுது பேதுருவும் மற்றவர்களும் வேறு எவ்வித வார்த்தை அலங்காரத்தையும் பயன்படுத்தாமல் "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (5:29) என்றே கூறினார்!

## பிரசங்கித்தல் (5:30-32)

பிறகு அவர்கள் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், மகிமைப்படுதல் ஆகியவைபற்றி ஒரு சிறு பிரசங்கத்தைப் பிரசங்கித்தனர். பிறகு அவர்கள் கூறிய எல்லா உண்மை களுக்கும் (அவர்களை அற்புதங்கள் நிகழ்த்தும்படி செய்த)

*பரிசுத்த ஆவியானவரும் சாட்சி என்ற உண்மையைக் கூறி முடித்தனர்! ஆங்கிலத்தில் இப்பிரசங்கத்தில் மொத்தம் அறுபத்தியெட்டு வார்த்தைகளே உள்ளன, (தமிழில் 42 வார்த்தைகளே உள்ளன),[24] ஆனால் இந்தச் சில வார்த்தைகள் ஆலோசனைச் சங்கத்தாரை மூர்க்கமடையச் செய்தது: இஸ்ர வேலுக்கு மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் அருளப்பட்டது - இது இஸ்ரவேலர்கள் மனந்திரும்பிப் பாவ மன்னிப்புப்பெற வேண்டும் என்று மறைமுகமாய்க் குறிப்பிட்டது! அப்போஸ் தலர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தமையால் பரிசுத்த ஆவியான வரைப் பெற்றனர் - இது ஆலோசனைச் சங்கத்தார் பரிசுத்த ஆவியைப் பெறவில்லையென்றும், அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை என்றும் மறைமுகமாகக் குறிப்பிட்டது![25] ஆயினும், அப்போஸ்தலர்கள் இயேசுவை soter அதாவது இரட்சகர்[26] என்று கூறிய வார்த்தைகளே எல்லாவற்றைப் பார்க்கிலும் அவர்களை அதிகமாக மூர்க்கமடையச் செய்தது! உயிரைக் காக்கும் வைத்தியர், அல்லது பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் தத்துவ ஞானிகள் அல்லது நாட்டைக் காக்கும் தலைவர்கள் ஆகியோருக்கு "இரட்சகர்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவது ஆலோசனை சங்கத்தாருக்குப் பழக் கமான ஒன்றாக இருந்தது. ஆயினும் இயேசுவுக்கு அவ் வார்த்தை பயன்படுத்துவது என்பது, அவரே தங்கள் ஆத்து மாக்களை இரட்சிக்க முடியும் என்று சொல்வது என்பது அவர் களை அவமானத்தின் உச்சிக்கே அழைத்துச் சென்றதாகியது!*

*முதன்முதல் சுவிசேஷப் பிரசங்கத்தை*[27] பேதுரு பிரசங்கித் ததைக் கேட்ட யூதர்கள் தங்கள் "இருதயத்தில் குத்தப் பட்டார்கள்" *(வ. 2:37)*. இப்பொழுதோ, பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் சனதெரீன் சங்கத்தாருக்குப் பிரசங்கிக் கையில் *"அவர்கள் மூர்க்கமடைந்ததாக" (வ. 33அ)* பதிவுகள் கூறுகின்றன. ஆங்கிலத்தில் இவ்விரண்டு வசனங்களும் ஒன்றுபோலக் காணப்பட்டாலும், அவை ஒன்றல்ல. நடபடிகள் 2ல் யூதர்கள், தேவனுக்கு முன்பாகத் தங்கள் குற்றங்களை உணர்ந்தனர்: நடபடிகள் 5ல் ஆலோசனைச் சங்கத்தார் மதியீனமான மூர்க்கத்தால் நிறைந்தனர்! *"மூர்க்கமடைந்து"* என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை சொல்லுக் குச் சொல் *"அறுக்கப்பட்டு"* என்று பொருள்படுகிறது; பேதுரு

ஒரு இரம்பத்தை எடுத்து அவர்களின் இருதயத்தை அறுத்ததுபோல் அவர்கள் உணர்ந்தனர்! அதிகாரம் 7ல் மட்டுமே இவ்வார்த்தை மறுபடியும் காணப்படுகிறது, அங்கு ஸ்தேவான் கூட்டத்தாருக்குப் பிரசங்கம் பண்ணினார். வசனம் 33, ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள் "அவர்களைக் கொலை செய்யும்படிக்கு யோசனை பண்ணினார்கள்" என்று கூறுகிறது. அப்பொழுது அவர்கள் தடை செய்யப்பட்டிராவிட்டால், சந்தேகமின்றிப் பின்னாளில் ஸ்தேவானை அவர்கள் கொலை செய்தது போலவே அப்போஸ்தலர்களையும் வெளியே இழுத்துச் சென்று கல்லெறிந்து கொன்றிருப்பார்கள்.

மறுபடியும் தேவன் வேறு திட்டங்கள் வைத்திருந்தார்.[28]

## ஒரு பரிசேயர் (5:34-39)

அப்போஸ்தலர்களைக் கைது செய்யத் தூண்டிய சதுசேயர்களே அதிகமாய்க் கலக்கமடைந்திருக்க வேண்டும் (வ. 1). ஆலோசனைச் சங்கத்திலிருந்த பரிசேயர்கள் இதில் உணர்வுப்பூர்வமாய் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். சங்கத்தாரின் கொலை செய்யும் விருப்பத்தை நிறுத்த தேவன் ஒரு பரிசேயரைப் பயன்படுத்தினார். "அப்பொழுது சகல ஜனங்களாலும் கனம் பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர் கொண்ட ஒரு பரிசேயன் ஆலோசனைச் சங்கத்தில் எழுந்திருந்து, அப்போஸ்தலரைச் சற்றுநேரம் வெளியே கொண்டு போகச்சொல்லி" (வ. 34).

நடபடிகள் நூலில் இவ்விடத்தில்தான் நாம் முதன் முதலாகப் பரிசேயர்களைப்பற்றிப் படிக்கிறோம். தாராளக் கொள்கையுடைய சதுசேயர்களுக்கு முரண்பாடாக, பரிசேயர்கள் தீவிரப் பழைமைவாதக் கொள்கையுள்ள குழுவாய் இருந்தனர். இவர்கள் மனிதருடைய பாரம்பரியத்தையும், மோசேயின் பிரமாணத்தையும் மக்கள்மேல் சுமத்தியதால் இவர்களை நாம் "நியாயப் பிரமாணிக்கர்கள்"[29] என்று அழைக்கலாம்.

சனதெரீன் சங்கத்தில் பெரும்பான்மையோர் சதுசேயர்களாய் இருப்பினும், அதில் புகழ்மிக்க சில பரிசேயர்களும் இருந்தனர்.[30] அவர்களுள் கமாலியேல்[31] என்பவர் விசேஷ

மாய்க் குறிப்பிடத்தக்க பரிசேயர் ஆவார். இஸ்ரவேலில், கமாலியேல் மிகவும் கனம் பெற்ற போதகராயிருந்தார். பின்னாளில் அவர் மரித்தபோது, ''ரப்பான் கமாலியேல் மரித்துத் போனதால், நியாயப்பிரமாணத்திற்கு மரியாதை அற்றுப் போயிற்று; பரிசுத்தமும், தீட்டிலிருந்து விலகியிருத்தலும் அவரது மரணத்தோடு மரித்துப் போயிற்று'' என்று கூறப் பட்டது (வில்லியம் பார்க்ளேயின் மேற்கோளிலிருந்து). அவர் அந்தக் கூட்டத்தின் கவனத்தை ஈர்த்து, அப்போஸ்தலர்களை வெளியே கொண்டுபோகச் சொல்லி கட்டளையளித்தது அவருக்குத் தரப்பட்ட மரியாதையைக் காட்டுகின்றது.

அப்போஸ்தலர்களை அங்கிருந்து அகற்றியதே சூழ்நிலையைக் கலைப்பதற்கான கமாலியேலின் முதல் படியாகும். அவரது அடுத்த படி, ஆலோசனை சங்கத்தாருக்கு அவர் தர்க்கரீதியாக விஷயத்தை உணர்த்தியது ஆகும்:[32]

> ... இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப் போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ்[33] என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்;[34] ஏறக்குறைய நானூறு பேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்து போனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி அவமாய்ப் போனார்கள். அவனுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய[35] யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்து போனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப் பட்டார்கள். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும், இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்த தானால் ஒழிந்துபோம்; தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான் (வ. 35-39).

கமாலியேல் தம்முடைய குறிப்புரையை "எச்சரிக்கையாயிருங்கள்'' என்ற வார்த்தைகளுடன் துவக்கினார் - வேறு வார்த்தைகளில் சொல்வதானால், "சற்று நின்று, நீங்கள் என்ன

செய்கிறீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்'' என்று ஆகிறது. அழிவை நோக்கி ஓடிக் கொண்டிருப்பவர்களைச் சற்று அமர்த்தி அவர்களின் செய்கைகளுடைய விளைவைப்பற்றிப் போது மான அளவு சிந்திக்க வைத்தலே பல வேளைகளில் அவர் களுக்கு உதவி செய்வதில் சிறந்த வழியாகும். ''அவர்களை (அப்போஸ்தலர்களை) விட்டுவிடுங்கள்'' என்பதே ஆலோ சனை சங்கத்தாருக்குக் கமாலியேலின் அறிவுரையாக இருந்தது. கிறிஸ்தவம் என்பது ''மனிதனால்'' உண்டானதாயிருந்தால் ஆலோசனைச் சங்கத்தார் அதை எதிர்த்து நிற்கத் தேவை யில்லை; அது இயற்கையாகவே மரித்துவிடும் என்பதே அவர் வாதமாகும் (இதற்கு அவர் நன்கறியப்பட்ட இரண்டு சம்பவங்களைத் தமது அறிவுரைக்கு ஆதாரமாகக் காட்டினார்). மாறாக, கிறிஸ்தவம் என்பது "தேவனால்" உண்டாயிருந்ததே யானால், அவர்கள் அதை எதிர்த்து நிற்பது அவர்களுக்கு நல்லதல்ல. அவர்களின் எதிர்ப்புக்கு மாறாக அது வெற்றியடை யும், அவர்கள் ''தேவனோடு போர் செய்கிறவர்களாய்'' காணப்படுவார்கள். இவ்விதமாக அவர், "இந்த மனுஷருக்கு ஒன்றுஞ் செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள்'' என்று முடிவாகக் கூறினார்.

கிறிஸ்தவம் வெற்றியடைந்து கொண்டிருந்ததாலும், ஆலோசனைச் சங்கத்தார் தங்களை தேவனுக்கெதிராகப் போர் செய்து கொண்டிருக்கிறவர்களாய்க் கண்டதாலும், கமாலி யேலை அவரது அறிவுரைக்காகப் புகழ்ந்து, புதிய மார்க்கம் எதனுடனும் செயல்புரியும் நுணுக்கத்திற்கு அவரது வார்த்தை களில் இருந்து அணுகுமுறையைக் காணும்படி அவர்கள் தூண்டப்பட்டனர். கமாலியேல் தான் கூறியது எதிலும் தேவ ஆவியால் ஏவப்பட்டவராகக் கூறவில்லை,[36] மற்றும் அவரது வார்த்தைகள் எதையும், தவறான போதனைக்குச் செயல் படுத்தும் விதமாக லூக்கா பதிவு செய்யவுமில்லை. கமாலி யேலின் ஆலோசனைபற்றி ஜான் லேங் அவர்கள் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்:

I. பின்கண்டவைகளைச் செய்தால் அது ஞானமற்றதாகும்:
   அ. எது வெற்றியடைகிறது அல்லது தோல்வியடைகிறது என்பதின் அடிப்படையில் மட்டும் நியாயந் தீர்ப்பதற்கு ஒரு சாக்குப்போக்கு தேடுதல்.[37] அல்லது

ஆ. உடனடியாக முடிவெடுக்கக்கூடிய சூழ்நிலைக்கு மாறுபட்டிருக்க ஒரு சாக்குப்போக்கு தேடுதல்.[38]

II. பின்கண்டவைகளைச் செய்தால் அது ஞானமுள்ளதாகும்:

அ. மற்றவர்களை நியாயந்தீர்ப்பதில் தாழ்மையைக் காட்டப் பழகுதல், அல்லது

ஆ. நியாயந்தீர்க்கும் விஷயங்களில் நம்மிலிருந்து மாறுபட்டிருப்பவர்களைத் தயவுடன் நடப்பித்தல்.

J.W. மெக்கார்வீ அவர்கள், "இவ்வியக்கமானது வன்முறையினால் அமிழ்த்தப்பட வேண்டுமா? ... என்று கமாலியேல் தர்க்கம் செய்தார்; இந்தக் கண்ணோட்டத்தில் அவரது அறிவுரை உறுதியாகவே நல்லதாகும்" என்று குறிப்பிட்டார். ஒருவர் தவறானவைகளைப் போதிக்கும் போது, அந்தத் தவறைப் போக்குவதற்கு நாம் வன்முறையைப் பயன்படுத்தும்படி தேவன் விரும்புவதில்லை; மாறாக சத்தியத்தைக் கொண்டு நாம் தவறை எதிர்த்து நிற்கும்படியே தேவன் விரும்புகிறார்.

மார்க்கத்தின் எல்லா சூழ்நிலைகளுக்கும் பரிந்துரை செய்யும்படியாகக் கமாலியேலின் வார்த்தைகளை லூக்கா பதிவு செய்யவில்லையென்றால், பிறகு ஏன் இவ்விடத்தில் அவைகளைப் பதிவு செய்தார்? முதலாவதாக, தேவன் இந்தப் புகழ்பெற்ற போதகரை அப்போஸ்தலர்களுடைய வாழ்க்கையைக் காப்பதற்காக எப்படிப் பயன்படுத்தினார் என்பதைக் காட்டுவதற்காக அவர் கமாலியேலின் வார்த்தைகளைப் பதிவு செய்தார். இரண்டாவதாக, நல்ல மனநிலையுள்ள மனிதர்கள் யாவரும், இச்சமுதாயத்திற்குக் கிறிஸ்தவர்கள் எந்த ஒரு பயமுறுத்தலையும் தருவதில்லை என்று காட்டுவதற்காக இப்பேச்சை அவர் பதிவு செய்தார்.

கமாலியேல் தமது சொந்த ஆலோசனையைத் தாமே கவனித்திருப்பாரேயானால், அவர் ஒரு கிறிஸ்தவராகியிருப்பார் - ஏனெனில் கிறிஸ்தவம் வெற்றியடைந்திருந்தது, அது ''தேவனால் உண்டாயிருந்தது'' என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருந்தன. நாம் அறிந்த வகையில் அவர் அதை செய்யவில்லை,[39] ஆனால் அவர் அப்போஸ்தலர்களின் வாழ்க்கையைப் பாதுகாத்தார். ஒருவேளை மற்றவர்களின் வாழ்க்கையில் பின்னாளில்[40] அறுவடை தரக்கூடிய விதையை அன்று

அவர் விதைத்தார் என்று கொள்ளலாம். அவருடைய மாணவர் களில் ஒருவராகிய தர்சு பட்டணத்தானாகிய சவுலும் (22:3) கூட அவருடைய வார்த்தைகளைக் கேட்க அன்று அங்கு இருந்திருக்கச் சாத்தியமுண்டு.

## உபத்திரவம் (5:40)

கமாலியேல் பேசி முடித்தபின் ஆலோசனை சங்கத்தார் "அவனுடைய யோசனைக்கு உடன்பட்டதாக" வசனம் 40 கூறுகிறது. அப்போஸ்தலர்களை அவ்விடத்திலேயே கொல்லாத அளவுக்கு அந்தக் கூட்டத்தார் கமாலியேலின் அறிவுரையை ஏற்றுக்கொண்டனர். கமாலியேலின் பேச்சுக்குப் பிறகு சூடான ஒரு விவாதம் எழுந்திருக்கும் என்று என்னால் கற்பனை செய்ய முடிகிறது: ''அவர்களை நாம் கொலை செய்ய முடியா தென்றால், நாம் என்னதான் செய்ய முடியும்?'' நிறைவாக யாரேனும் ஒருவர் பின்வரும் ஆலோசனையைக் கூறியிருக்க லாம்: "நாம் நமது பணியைச் செய்கிறோம் என்பதைக்காட்ட, அவர்களை அடிக்கும்படி செய்யலாம், அது போதுமானதா யிருக்கலாம்!"

"அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து" (வ. 40ஆ) என்று நாம் படிக்கிறோம். அடித்தல் என்பது குறிப்பிடத்தக்கதல்லாத தண்டனையல்ல. இவ்வாறு அடிக்கப்பட்ட சிலர் வாழ்நாள் முழுவதும் ஊனமாகியிருக்கின்றனர்; சிலர் அடிக்கப்படும் போதே மரித்திருக்கின்றனர்; எல்லாருக்குமே சரீரத்திலும், உணர்வுகளிலும் அவர்களின் எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவ திலும் தழும்புகள் ஏற்பட்டுள்ளன. சவுக்கை உண்டாக்கு வதற்கு, பல தோல் பட்டைகள் ஒரு கைப்பிடியில் இணைக்கப் பட்டன. ஒவ்வொரு தோல் பட்டையின் நுனியிலும் உலோக முள் அல்லது எலும்புத் துண்டுகள் அடிபடுபவரின் சதையைக் கிழிக்கும்படி வைக்கப்பட்டன. திறமைபெற்ற ஒரு சவுக்கடி யாளர் அடிபடுபவரின் முதுகில் ஒவ்வொரு அடியிலும் அநேக இடங்களைக் கிழிக்க முடியும். சட்டமானது நாற்பது சவுக் கடிகள்[41] கொடுப்பதை அனுமதித்தது, ஆனால் அதிகபட்சமாக முப்பத்தொன்பது சவுக்கடிகளே[42] தரப்பட்டன. அடிபடுப வரின் முதுகு வெளிப்படும்படியாக அவர்களுடைய மேலாடை

மற்றும் உள்ளாடை ஆகியவை நீக்கப்படும் அல்லது கிழிக்கப் படும். குற்றம் சாட்டப்பட்டவரின் கைகள் ஒரு தூணுடன் சேர்த்துக் கட்டப்படும். தண்டனை நிறைவேற்றுபவர்களில் ஒருவர் அடிக்க, இன்னொருவர் அடிகளை எண்ணுவார். இந்நிகழ்ச்சியில், பன்னிரெண்டு மனிதர்கள் அடிக்கப்பட்டனர்- மொத்தம் ஏறக்குறைய ஐநூறு சவுக்கடிகள்!

மிருகத்தனமான இவ்வேலை முடிந்தபிறகு, சனதெரீன் சங்கத்தார், "இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக் கூடாதென்று [முன்பே கொடுத்த கட்டளையை புதுப்பித்து] கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள்" (வ. 40இ). அப்பன்னிரெண்டு பேரும் அடிபட்டு, அறைகளில் இரத்தம் ஒழுக தடுமாறிக் கொண்டிருக்கையில், அக்கூட்டத் தார், நிச்சயமாக, "இத்தோடு இக்கதை முடிந்து விடும்" என்று எண்ணியிருப்பார்கள்.

## சந்தோஷம் (5:41)

மேலும் ஒருமுறை கிறிஸ்தவம் தனது நெருக்கடியான நிலையில் இருந்தது. மிருகத்தனமான ஒரு அடியினால் சுவிசேஷமானது நிறுத்தப்பட்டிருக்க முடியுமென்றால், விரைவிலேயே சபை என்பது இல்லாமல் போயிருக்கும், ஏனெனில், "[இராஜ்யத்தின்] விதை தேவனுடைய வசன மாகும்" (லூக். 8:11). நம்மில் சிலரைப் போல் அப்போஸ் தலர்கள் இருந்திருந்தால், அடுத்த வசனத்தை நாம்: "அவர்கள் மோசமாக நடத்தப்பட்டதால் ஆலோசனை சங்கத்தாரின் முன்னிலையிலிருந்து அழுது கொண்டே புறப்பட்டுச் சென்ற னர்" என்றோ, அல்லது "இயேசுவைப் பின்பற்றுவது கடின மானது என்பதால் புகார் கூறியவாறே அவர்கள் ஆலோசனை சங்கத்தாரின் முன்னிலையிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்" என்றோ வாசித்திருப்போம்.

மாறாக, வசனம் 41ல், "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடி யினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்" என்றுள்ளது. J.W. மெக்கார்வீ அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்,

> அவர்கள் விடுதலையாக்கப்பட்டு புறப்பட்டுச் சென்றபோது, "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடி யினால், சந்தோஷமாய்" என்று எழுதியுள்ள வார்த்தைகள் இப்படிப்பட்ட ஒரு புத்தகத்தில், இப்படிப்பட்ட மனிதர்களைப்பற்றி எழுதப்பட்டிராவிட்டால், நம்பத் தக்கதற்றதாகியிருக்கும், அவர்கள் நிகழ்த்திய எந்த ஒரு அற்புதத்தைக் காட்டிலும் கூட, இந்த நிலைமை மிகுந்த வியப்புக்குரியதாய் உள்ளது; அவர்கள் துன்புறுத்தப் படுவது இது முதல் தடவை அல்ல என்பதை நாம் கவனிக்கையில் இது வியப்புக்குரியதாய் உள்ளது.

பெருக்கப்பட்ட வேதாகமத்தில் (Amplified Bible) "பாத்திர ராக எண்ணப்பட்டதை'' என்பது அவர்கள் ''மதிப்புக் குறைவாக்கப்பட்டதை உயர்ந்த மதிப்புள்ளதாக" எண்ணினர் என்று வாசிக்கும்படியாக விவரிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பன்னிரெண்டு பேரும் தாங்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து வியப்படையவில்லை, ஏனெனில் அவர்கள் அடிக்கப்படுவார்கள் என்று இயேசு எச்சரித்திருந்தார் (மத். 10:17; மாற். 13:9). மேலும் அவர் தமது மலைப்பிரசங்கத்தில் அவர்களுக்குப் பின்வருமாறு அறைகூவல் விடுத்திருந்தார்:

> நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான் கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார் களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப் பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசி களையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத். 5:10-12).

உபத்திரவத்தில் களிகூருதல் என்பது நம்மில் எவரும் கற்றுக் கொள்ள மிகவும் கடினமான பாடங்களில் ஒன்றாகும். அடிக்கப்படும்போது திருப்பி அடிக்க வேண்டும் என்ற அடிப்படையான உணர்வுகொண்ட பேதுருவுக்கு, இது வழக்கத்திற்கு மாறாக கடினமானதாயிருந்திருக்கும் (மத். 26:51). ஆயினும் இயேசுவின் இனிமையான ஆதிக்கத்தினால், பேதுரு

இக்கடினமான பாடத்தைக் கற்றிருந்தார், பின்னாளில் தங்கள் விசுவாசத்திற்காக உபத்திரவப்பட்டுக் கொண்டிருந் தவர்களுக்கு அவர் இவ்வாறு எழுதினார்:

> பிரியமானவர்களே ... உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகை யாமல், கிறிஸ்துவின் ... பாடுகளுக்கு நீங்கள் பங்காளி களானதால் சந்தோஷப்படுங்கள் ... ஒருவன் கிறிஸ்தவனா யிருப்பதினால் பாடுபட்டால், வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் (1 பேது. 4:12-16).[43]

என்னைக்காட்டிலும், உங்களில் அநேகர் கிறிஸ்தவரா யிருப்பதில் உள்ள பாடுகளைப்பற்றி அதிகமாய் அறிந்திருக் கிறீர்கள். அரசாங்க அதிகாரிகளால் என்றைக்கும் நான் பிரசங் கத்தை நிறுத்தும்படி கட்டளை பெற்றதில்லை; எனது விசுவாசத்திற்காக எனது வாழ்க்கையோ அல்லது பிரயாசமோ என்றைக்குமே அச்சுறுத்தப்பட்டதில்லை. ஆயினும், இங்குள்ள நம் அனைவருக்கும் இதில் பாடங்கள் உள்ளது. மார்க்க ரீதியாக சுதந்திர நிலையில் வாழ்பவர்களுக்கும் பாடங்கள் இதில் உண்டு. இதை விளக்கப்படுத்துவதற்காக, ஒவ்வொரு கிறிஸ்த வருக்கும் அவர் உபத்திரவப்படும் வேளையில் செலவழிக்க வேண்டும் என்று பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படுவதாகக் கற்பனை செய்து கொள்வோம். (இது ரிக் ஆட்ச்லியின் பிரசங்கத்திலிருந்து தழுவப்பட்டது.) அதில் சில கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவினிமித்தம் தங்கள் ஜீவனை விடும்போது - அந்தப் பத்தாயிரம் ரூபாயையும் ஒரே தரமாகக் கீழே வைக்கு மாறு அழைக்கப்படுகின்றனர். ஆயினும் நம்மில் அநேகருக்கு இதை ஆயிரக்கணக்கான முறைகள் ஒவ்வொரு ரூபாயாகக் கீழே வைக்கவேண்டிய நிலைதான் உள்ளது. கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படுகையில், பேசுபவர் நம்மீது கோபப்படுகை யில் நாம் மறுக்கின்றோம். அது உபத்திரவத்தின் ஒரு ரூபாய் மதிப்புள்ளதாகும். நம்மில் யாரேனும் தூற்றப்பட்டால், கூட்டத்தார் நம்மை எதிர்த்து நின்றால், நாம் எழுந்து நிற்கி றோம். இது இன்னொரு ரூபாயாகும். நம்மைச் சுற்றியுள்ளவர் களின் ஒழுக்கவீனங்கள் மற்றும் நேர்மையற்ற தன்மை

*இவற்றோடு ஒத்துப் போகாதபோது நாம் இகழப்படுவது இன்னொரு ரூபாயைச் செலவழிப்பதாகும். முடிவில் இவை யெல்லாம் ஒரே விஷயத்தைச் சேர்ப்பதாக உள்ளது: "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12). நம்மீது வருகிற உபத்திரவத்தின் அளவு எவ்வளவாயிருப்பினும், "அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப் பட்டபடியால்" அப்போஸ்தலர்கள் சந்தோஷம் அடைந்ததை நாம் கற்றுகொள்ள வேண்டியது தேவையாயிருக்கிறது!*

## தடைகளின் மத்தியிலும் தொடர்ந்த முயற்சி (5:42)

*"இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாது!" என்று அதிகாரிகள் மறுபடியும் கட்டளையிட்டனர். அப்போஸ்தலர் கள் மறுபடியும் மனுஷரைப் பார்க்கிலும் தேவனுக்கே கீழ்ப் படிந்தனர்: "தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்" (வ. 42). சித்திரவதை அவர்கள் போத னையை நிறுத்தவில்லை; வேதனை அவர்கள் பிரசங்கத்தை நிறுத்தவில்லை; ஆலோசனைச் சங்கத்தாரின் வார்த்தைகளும் அவர்களின் சாட்சியத்தை நிறுத்தவில்லை.*

*வசனம் 42ல் உள்ள "உபதேசம் பண்ணி" என்ற வார்த்தை "உபதேசம் செய்தல்" என்பதற்குரிய வழக்கமான கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது;[44] ஆனால் "பிரசங்கித்து" என்ற வார்த்தை "சுவிசேஷம்"[45] என்ற கிரேக்க வார்த்தையின் வினைச் சொல் வடிவத்திலிருந்து மொழியாக்கப்பட்டுள்ளது. சொல்லுக் குச் சொல் இது, "அவர்கள் நற்செய்தியளிப்பதைத் தொடர்ந் தார்கள் (அதாவது சுவிசேஷ செய்தியளிப்பது)!" புதிய நூற் றாண்டு மொழிபெயர்ப்பில் இது, "அவர்கள் - இயேசுவே கிறிஸ்து என்ற - நற்செய்தியைத் தொடர்ந்து கூறினார்கள்" என்றுள்ளது. வெளிப்படையாக (தேவாலயத்திலே) யும், உள்ள ரங்கமாக (வீடுகளிலே) யும் இயேசுப்பற்றிய நற்செய்தியை[46] அவர்கள் தொடந்து கூறினார்கள்!*

## முடிவுரை

அடுத்த பாடத்திலும் நாம், மனிதன் "இல்லை" என்று சொல்லும்போதுகூட தேவனுக்குக் கீழ்ப்படிவதில் உள்ள அறைகூவலைத் தொடர்ந்து விவாதிப்போம். அதுவரை, இக்கணத்தில், எந்த சூழ்நிலையிலும், என்ன விளைவுகள் ஏற்பட்டாலும் "மனுஷருக்கல்ல தேவனுக்கே கீழ்ப்படிய" நாம் தீர்மானிப்போம்.

## காட்சி-உதவிக் குறிப்புகள்

இப்பாடத்தில், அப்போஸ்தலர்கள் சிறையில் அடைக்கப் பட்டு, பின்னால் அவர்கள் அடிக்கப்பட்டபோது கிறிஸ்தவர் களுக்கு உபத்திரவம் அதிகமாயிற்று. வகுப்பில் உள்ளவர்களின் "ஆர்வத்தைக் கவரும்" வகையில் வகுப்பை ஆரம்பிக்க ஒருவழி, நல்நடக்கையில் உள்ளவர்களுக்கு ஏற்படும் உபத்திரவங்களின் மதிப்பைப்பற்றிப் பேசுவதாகும். இரும்பு அல்லது உருக்கினால் செய்யப்பட்ட அநேக பொருட்களை - குதிரை லாடம், ஆணிகள், கத்தி அல்லது ஊசிகள் இவற்றை - காண்பிப்பதில் தொடங்குங்கள். இப்பொருட்களின் மதிப்பு அவைகள் நெருப்பினால் பக்குவப் படுத்தப்படும் நேரத்தின் அளவுக்குத் தக்கதாக உயருவதை ஒப்பிட்டுக் காட்டுங்கள். (இப்பாடத்தில் உபத்திரமடைந் தவர்களில் ஒருவரான) பேதுரு பின்னாளில் "உங்களிடையே பற்றியெரியும் அக்கினியை" ப் பற்றிப் பேசியுள்ளார் (1 பேது. 4:12). சரியான முறையில் பயன்படுத்தப்பட்ட உபத்திரவங்கள் மற்றும் சோதனைகள் யாவும் நம்மைக் கட்டியெழுப்பி பலப்படுத்த முடியும் (இப்பாடத்தில் அப்போஸ்தலர்களின் நடக்கைகளைக் குறிப்பிடுங்கள்)! "சோதனை அல்லது உபத்திரவங்களுக்கு நாம் எவ்விதம் பதில்செயல் செய்கிறோம்?" என்பதே இங்கு கேள்வியாகும்.

## ❦ பிரசங்கக் குறிப்புகள் ❦

*1986 நவம்பர் மாதத்திய பிரசங்கியாரின் பத்திரிகை (இப்பொழுது “இன்றைக்கான சத்தியம்”) இதழில், நடபடிகள் 5:12-42 பற்றி நிக் ஹேமில்ட்டன் அவர்கள் ஒரு பிரசங்கத்தை “மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்” என்ற தலைப்பில் எழுதியிருந்தார். முக்கிய கருத்துக்களாக அவர் நான்கு* “C” *க்களைப் பயன்படுத்தினார்: (1) சீஷர்களின் மேல் குற்றச்சாட்டு* (The Disciples’ Charge) *(வ. 12-21); (2) சீஷர்களின் தேர்ந்தெடுப்பு* (The Disciples’ Choice) *(வ. 21:32); (3) சீஷர்களின் திருப்தி* (The Disciples’ Contentment) *(வ. 33-41); (4) சீஷர்களின் உறுதிப்பாடு* (The Disciples’ Commitment) *(வ. 42).*

*வாரென் வயர்ஸ்ப் அவர்கள் நடபடிகள் 5:17-42பற்றி “சத்தியமும் விளைவுகளும்” என்ற தலைப்பில் ஒரு பாடத்தை எழுதினார். இது The Bible Exposition Commentary*, vol. 1 *என்ற புத்தகத்தில் உள்ளது. வித்தியாசப்பட்டவர்கள் சத்தியத்திற்குக் காண்பித்த பதில்செயல் இதன் முக்கியக் கருத்துக்களாக உள்ளது: (1) சத்தியத்தைத் தாக்குதல் (ஆலோசனைச் சங்கத்தார்) (வ. 17-28); (2) சத்தியத்தை உறுதிப்படுத்துதல் (அப்போஸ்தலர்கள்) (வ. 29-32); (3) சத்தியத்தைத் தவிர்த்தல் (கமாலியேல்) (வ. 33-39); (4) சத்தியத்தை அறிவித்தல் (சபையார்) (வ. 40-42).*

---

குறிப்புகள்

[1]முன்னுரையில் குறிப்பிட்டபடி, கிறிஸ்தவர்களல்ல, யூதர்களே குடிமக்களின் மத்தியில் கலகத்தை உண்டுபண்ணக் காரணமாயிருந்தவர்கள் என்பதை உறுதியாகக் காண்பிப்பதும் நடபடிகளில் லூக்காவின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. [2]மனிதரின் நன்மைக்காகவே தேவன் குடும்பத்தை ஏற்படுத்தினார், ஆனால் இது, தேவனின் திட்டத்தின்படியே ஒவ்வொரு குடும்பமும் உள்ளது என்று பொருளாகாது. [3]வரிகள் செலவழிக்கப்படும் விதம்பற்றி நமக்கு ஒப்புமையில்லையென்றால் நாம் வரிகளைச் செலுத்தக் கூடாது என்று சிலர் கூறுகின்றனர். ரோமருடைய கொள்கைகள் ஒவ்வொன்றும் எந்த ஒரு கிறிஸ்தவருக்கும் ஏற்புடையதாயிருந்ததில்லை, ஆனாலும் இயேசுவும், பவுலும் ரோம அரசிற்கு வரி செலுத்த வேண்டும் என்றே கூறினார்கள். நாம் வரிகளைச் செலுத்தினோமா இல்லையா என்பதுபற்றி தேவனுக்கு

*நாம் கணக்கொப்புவிக்க வேண்டும்; அந்தப்பணம் எவ்விதம் பயன்படுத்தப் பட்டதென்று அரசின் தலைமைத்துவப் பதவிகளில் உள்ளவர்கள் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும்.* [4]*உதாரணமாக, 1 பேது. 2:17ஐ* NIV*யில் "எல்லாருக்கும் சரியான முறையில் மரியாதை பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ''சரியான முறையில் மரியாதை பண்ணுங்கள்'' என்பதும் ''கனம்பண்ணுங்கள்'' என்பதும் ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளன.* [5]*அசுத்த ஆவிகள் பிடித்தல்பற்றி இப்புத்தகத் தில் முதல்முறையாக இவ்விடத்தில் கூறப்படுகிறது. தாராளக் கொள்கை யுடைய கல்விமான்கள், உண்மையாகவே அசுத்த ஆவிகள் பிடித்திருத்தல் என்பதை மறுத்து. சரீர சுகவீனங்களுக்கு அசுத்த ஆவிகள் காரணமாயிருந்த தாகக் கூறுகின்றனர். ஆயினும், வைத்தியராகிய லூக்கா பிணியாளிகளையும், "அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும்" வேறுபடுத்திக் காட்டினார். பின்வரும் இதழ் ஒன்றில் "அசுத்த ஆவிகள்" என்ற துணைக் கட்டுரை ஒன்றை எதிர்பாருங்கள்.* [6]*பேதுருவின் முக்கியத்தும் மறுபடியும் வலியுறுத்தப்படுகிறது. மற்ற அப்போஸ்தலர்களின் நிழலைப்பற்றியும் அக்கூட்டத்தார் அதே போல எண்ணினார்களா இல்லையா என்பது லூக்காவால் குறிப்பிடப்படவில்லை.* [7]*நிழல்களைப்பற்றி அநேக மூட நம்பிக்கைகள் அந்நாட்களில் மக்களிடையே நிலவி வந்தன.* [8]*பதவியிலிருந்த பிரதான ஆசாரியரே சனதெரீன் சங்கத்தின் தலைவராகவும் இருந்தபடியால், அநேகமாக இது காய்பாவாகவே இருக்கக்கூடும்.* [9]*சனதெரீன் சங்கம் பெரும்பாலும் சதுசேயர்களால் ஆனதாக இருந்தது.* [10]*"சமயத்தார்" என்பது hairesis என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. இதிலிருந்தே நாம்* "heresy" *என்ற வார்த்தையைப் பெறுகிறோம். இதன் பன்மைச் சொல்லாகிய "மார்க்க பேதங்கள்" என்பது 1 கொ. 11:19 மற்றும் கலா. 5:20ல்* (KJV) *குறிப்பிடப்பட்டுள்ளது. இது பரிசேயர்களுக்கு (அப். 15:5; 26:5) பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் கிறிஸ்தவர்களுக்கு (அப். 24:5; 28:22) தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

[11]*இயேசு புகழ் பெற்றது பற்றிக்கூட அவர்கள் பொறாமைப்பட்டனர் (மத். 27:18; மாற். 15:10).* [12]*"தூதன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "செய்தியாளன்" என்று பொருள்படும், இது ஒரு மனித அல்லது தெய்வீக செய்தியாளனைக் குறிக்கக்கூடும். இவ்விதமாய் சிலர் (சிறப்பாக அற்புதங்களை மறுக்கின்றவர்கள்) கிறிஸ்தவத்திற்காக இந்த அப்போஸ்தலர்கள் சிறையிலிருந்த யாரோ ஒருவரால் விடுவிக்கப்பட்டி ருக்கலாம் என்று தர்க்கம் செய்கின்றனர். ஆயினும் அவர்களின் விடுதலை யில் இருந்த எல்லா சூழ்நிலைகளும் மற்றும் இதே போன்று நடபடிகள் 12ல் ஏற்பட்ட நிகழ்வும் இணைந்து ஒரு தெய்வீக செய்தியாளருக்கே ஆதரவா யுள்ளன. மேலும், இவ்வார்த்தை "புதிய ஏற்பாட்டில் தெய்வீக செய்தியாளர் களுக்கே ... பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது"* (F.F. Bruce, *The Book of Acts*, The New International Commentary on the New Testament, rev. ed. [*கிரான்ட் ரேப்பிட், மிச்.*: Wm. B. Eerdmans Publishing Co., 1988], 110). *நான் அறிந்த வரையில் ஒவ்வொரு மொழிபெயர்ப்பிலும் இது ''தூதன்'' என்ற வார்த்தையாகவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [13]*நற்செய்தி அறிவிப்பு என்ற பணியானது இன்னமும் அப்போஸ்தலர்களின் தோள்களின் மேலேயே அடிப்படையாய் விழுந்த கடமையாக இருந்ததை இது நிச்சயமாகவே*

சுட்டிக்காட்டுகின்றது - அவர்கள் இதைச் செய்யாதிருந்தால் அப்பணி செய்யப்படாமல் இருந்திருக்கும், செய்யப்பட்டிராது. இச்சூழ்நிலை விரைவிலேயே மாற வேண்டியதாய் இருந்தது (அப். 6:8-10; 8:1, 4, 5). [14]ஒருவேளை லூக்கா, சனதெரீன் சங்கத்தின் இயல்பை, ரோம அதிகாரியான தெயோப்பிலு (அப். 1:1) நன்கு புரிந்து கொள்வதற்காக "ராஜ்யசபை" என்று அழைத்திருக்கலாம். [15]இவர்கள் ரோமாபுரி வீரர்கள் அல்ல, ஆனால் தேவா லயத்துச் சேவகராயிருந்த யூதர்கள் ஆவர். [16]சேவகர் மக்களைக் குறித்துப் பயப்படாதிருந்தால், அப்போஸ்தலர்கள் எப்படி நடத்தப்பட்டிருக்கலாம் என்பதற்கு, அப். 21:30-36ஐக் காண்க. [17]பேதுரு மறுப்பைத் தெரிவிக்க முயன்றார், ஆனால் இயேசு அவரைக் கடிந்து கொண்டார் (இ.வ. லூக். 22:50, 51; யோவா. 18:10, 11). சந்தேகத்திற்கிடமின்றி, பேதுரு தமது பாடத்தைக் கற்றுக் கொண்டார். [18]ரோமர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைவதை நிறைவேற்றினார்கள் என்பதே அவர்கள் தங்கள் அலுவல் ரீதியாகக் கூறின நிலைப்பாடாக உள்ளது என்பது உறுதியாகும். [19]மூலபாஷையில் "சிலுவை" என்றிராமல் "மரத்தில்" என்றே உள்ளது (KJVயில் காணவும்). இது அநேகமாக சிலுவையின் சாபத் தன்மையையே குறிக்கிறதாய் உள்ளது (கலா. 3:13ல் உபா. 21:23 மேற்கோள் காட்டப்படுவதைக் கவனிக்கவும்). [20]"இயேசுவை எழுப்பினார்" என்ற சொற்றொடரானது தேவன் இயேசுவை மேம்படுத்தி உன்னத நிலைக்கு ("ஒரு புதிய ராஜாவை எழுப்பினார்" என்பதில் உள்ளது போல) உயர்த்தியதையோ அல்லது தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியதையோ குறிப்பிட முடியும். "எழுப்புதல்" என்பது மரணத்திற்கு முன்பே குறிப்பிடப்படுவதால், இங்கு கூறப்பட்டதில் முதலாவதையே அது குறிப்பதாயிருக்கும். ஆயினும், இது இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டதைக் குறிப்பிடவில்லையென்றால், அப்போஸ்தலர்களின் குறிப்பு களுக்கு வெளிப்படையான அடையாளங்கள் எதுவும் இல்லையென்றே ஆகிறது. ஆகவே இது இயேசுவின் சரீர உயிர்த்தெழுதலை குறிக்கிறது என்று நான் நம்புகிறேன். புதிய நூற்றாண்டு மொழிபெயர்ப்பில், "தேவன் … இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார்!" என்றுள்ளது.

[21]தேவன், மனந்திரும்புதலுக்குரிய பலனைத்தருவதால் (ரோமர் 2:4) மனந்திரும்புதல் என்பது தேவனுடைய கொடையாக உள்ளது மற்றும் மனந்திரும்பும் வாய்ப்பும் தேவனுடைய கொடையாகவே உள்ளது. [22]அப். 3:15ல் உள்ள அதே வார்த்தையாகவே இதுவும் உள்ளது; அப். 3:15க்குரிய குறிப்புகளைக் காணவும். [23]புதிய ஏற்பாட்டின் எஞ்சியுள்ள மற்ற பகுதிகளைப் போலவே, நடபடிகளின் புத்தகத்திலும் கீழ்ப்படியும் விசுவாசமே இரட்சிப்புக்கேற்ற விசுவாசமாக உள்ளது (ரோமர் 1:7; 16:25; கலா. 5:6; யாக். 2:14-26). [24]இந்த எண்ணிக்கை, வசனம் 29ல் உள்ள துவக்க வார்த்தைகளை உள்ளடக்கவில்லை. கிரேக்க மொழியில், இது ஐம்பது வார்த்தைகளையே கொண்டுள்ளது. [25]தேவனுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தால், அவர்களும் பரிசுத்த ஆவியானவரைப் பெற முடியும் என்பது இங்கு மறைமுகமாய் காணப்படுகிறது. அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது இது உண்மையானது. ஆயினும் அப்போஸ்தலர்கள் பெற்ற அதே வெளிப் பாட்டை இவர்கள் பெற முடியாது, ஆனால் தேவனுடைய குமாரர்கள் என்ற வகையில், தேவனுடைய குமாரனின் ஆவியை அவர்கள் பெற முடியும் (கலா. 4:6). [26]இரட்சிப்பு இயேசுவின் மூலமாகவே வருகிறது என்பதை பல

வழிகளில் அப்போஸ்தலர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால் நடபடிகள் நூலில் இவ்விடத்தில் தான் "இரட்சகர்" என்ற வார்த்தை முதன்முதலாகக் காணப்படுகிறது. [27]இப்பிரசங்கம் இதன் முழுமையோடு பிரசங்கிக்கப் பட்டது (நடபடிகள் 2). [28]பின்னாளில் அப்போஸ்தலனாகிய யாக்கோபு கொல்லப்பட தேவன் அனுமதித்தார் (அப். 12:1, 2) மற்றும் இன்னும் பின்னாட்களில் எஞ்சியிருந்த பெரும்பாலான அப்போஸ்தலர்களும் கொல்லப்பட அனுமதித்தார். ஆயினும் அனைத்து அப்போஸ்தலர்களும் ஒரே நேரத்தில் கொல்லப்பட அனுமதிக்காதபடி அநேக பொறுப்புகள் அவர்கள் தோள்களில் இருந்தன. [29]சட்டத்தைக் கண்டிப்பாகக் கடைப் பிடிப்பவர்களைச் சிலர் தவறாக "நியாயப் பிரமாணிக்கன்" என்றழைக் கின்றனர். இவ்விளக்கத்தின்படிப் பார்த்தால், இயேசு ஒரு நியாயப் பிரமாணிக்கர் ஆவார் (மத். 7:21-23). மாறாக, "நியாயப்பிரமாணிக்கன்" என்ற வார்த்தையானது "தேவன் கட்டுப்படுத்தாத இடத்தில் கட்டுப்படுத்து பவரையும்" "தாராளக் கொள்கையுடையவர்" என்பது "தேவன் சுதந்திரமாய் விடாத இடத்தில் சுதந்திரத்தை அனுமதிப்பவரையும்" குறிக்கின்றது. [30]வேதபாரகர்களில் பெரும்பாலோர் பரிசேயர்களாகவே இருந்தனர்; ஆலோசனை சங்கத்தில் பல வேதபாரகர்கள் இருந்தனர் (அப். 4:5, 15).

[31]இவர் முதலாம் கமாலியேல் அல்லது மூப்பர் கமாலியேல் ஆவார். இவருக்கு "ரப்பான்" ("நமது போதகர்") என்ற பட்டம் இருந்தது; சாதாரண போதகர்கள் "ரபீ" ("எனது போதகர்") என்று அழைக்கப்பட்டனர். இவருக்கு முன்னால் இப்பட்டத்தை ஏழு மனிதர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். இவர் புகழ் மிக்கவரான தமது தாத்தாவாகிய ஹில்லல் என்பவரின் கண்ணோட்டங் களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் மற்றும் இரக்க குணத்திற்குப் பெயர் பெற்றவராயிருந்தார். [32]மீண்டும் ஒருமுறை இவ்விடத்தில், மூடிய கதவுகளுக்குப் பின்புறம் நடந்தவற்றை லூக்கா எவ்விதம் "கண்டறிந்தார்" என்று கல்விமான்கள் வியக்கின்றனர், அநேக சாத்தியக் கூறுகள் உள்ளன, ஆனாலும் லூக்கா எப்போதுமே பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டி ருந்தார். [33]லூக்கா குறிப்பிட்டுள்ள இந்த தெயுதாஸ் என்பவனுக்குப் பின்னால் வந்ததாக இன்னொரு தெயுதாஸைப்பற்றி யோசிப்பஸ் அவர்கள் எழுதி யுள்ளதால், தெயுதாஸைப்பற்றிய விஷயம் ஒரு முரண்பாடாயிற்று. தேவனை நம்பாத சிலர், யோசிப்பாஸும் லூக்காவும் வெவ்வேறு தெயுதாஸ்பற்றிப் பேசினார்கள் அல்லது இருவரும் பேசுவது ஒரே தெயுதாஸ் என்றும் யோசிபஸ் கொடுத்துள்ள காலம் தவறானது (இது மட்டுமே யோசிபஸ் செய்துள்ள ஒரே தவறு அல்ல) என்றும் முடிவு செய்துள்ளனர். எப்படி யாயினும், கமாலியேல் கூறியதை லூக்கா மிகத் துல்லியமாகக் கொடுத்துள்ளார் என்று நாம் உறுதியாய் நம்பலாம். [34]ஒருவேளை இவன் தன்னைத் தீர்க்கதரிசி அல்லது மேசியா என்று பாராட்டியிருக்கலாம். [35]யூதாஸ் என்பவனின் கிளர்ச்சியைப்பற்றியும் யோசிப்பஸ் கூறினார். கி.மு. 6ல் ரோமாபுரியார், யூதாவின் ஆளுநராக ஒருவரை நியமித்தபோது, அமுலுக்கு வந்த புதிய வரிவிதிப்பு முறைமைகளை எதிர்த்து இவன் கலகம் செய்தான். லூக்கா 2ல் குறிப்பிட்டுள்ள குடிமதிப்பு இதற்கு முற்பட்ட காலத்தில் நடந்ததாகும். இவனுடைய இயக்கத்தின் பலமான ஆவியானது செலோத்தே என்னப்பட்டவர்களுக்குள் உயிர் கொண்டிருந்தது (நடபடிகள் 1:13ஐக் காணவும்). [36]கமாலியேலின் வார்த்தைகள் பரிசேயர்

*களின் இறையியல் கொள்கைகளைச் சார்ந்ததாகவே இருந்ததேயன்றி, கிறிஸ்தவர்களின் இறையியல் கொள்கைகளைச் சார்ந்ததாயிருக்கவில்லை. [37]சத்தியமானது இறுதியில் வெற்றியடையும் எனினும், இவ்வாழ்க்கையில் தவறுகள் அடிக்கடி வெற்றியடைகின்றன. [38]தவறைப் பொறுத்தவரை இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களோ "காத்திருந்து பார்க்கலாம்" என்ற நிலைப்பாட்டை எடுக்கவில்லை (1 யோவா. 4:1). [39]பின்னாளில் வந்த பாரம்பரியம் ஒன்று, கமாலியேல் கிறிஸ்தவராகியதாகக் கூறுகிறது, ஆனால் இதற்கு உதவும் ஆதாரம் எதுவும் இல்லை. கமாலியேல் பல நற்குணங்கள் பொருந்தியவராயிருந்தார், ஆனால் கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை அவர் மனக் கண்ணில் குருடராகவே இருந்தார். [40]பரிசேயரில் பலர் கிறிஸ்தவர் களானார்கள் (அப். 15:5; 23:6) இதில் சவுல்/பவுலும் அடங்குவார்.*

*[41]உபா. 25:1-3. ஒரு குற்றமானது குற்றம் செய்தவரை அடிப்பதற்கு உட்படுத்துகிறதா, அவருக்கு எத்தனை அடிகள் தரப்பட வேண்டும் என்ப தெல்லாம் நியாயதிபதிகளின் முடிவுக்கு விடப்பட்டது. [42]2 கொரி. 11:24. ஒன்று குறைய நாற்பது அடிகளோடு அவர்கள் நிறுத்திக் கொண்டதாகவே பலர் எண்ணுகின்றனர். ஏனெனில் நாற்பதுக்கு அதிகமாக எத்தனை அடிகள் அடிக்கப்படுகிறதோ அத்தனை அடிகளும் சவுக்கடியாளரின் முதுகுக்குத் திருப்பித் தரப்பட்டன. [43]ரோமர் 5:3-5; 2 கொரி. 6:10; பிலி. 1:29; 1 பேது. 1:6-9 திலும் காண்க. [44]* Didasko *என்பதே இவ்வார்த்தையாகும், இதிலிருந்து நாம்* "didactic" *என்பது போன்ற வார்த்தைகளைப் பெறுகின்றோம். [45]சொற்பொருள் அகராதியில்* "Gospel" *- சுவிசேஷம் என்ற வார்த்தையின் கீழ் காணவும். "பிரசங்கித்தல்" என்பதற்கு பொதுவாக "மேன்மைப்படுத்துதல்" என்பதே பொருளாகும் (அதாவது, இராஜாவின் பிரகடனத்தை அறிவித்தல்). [46]வசனம் 42ஐ அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்; இது சபை வளர்ச்சியின், திறவுகோல் "இரகசியங்களில்" ஒன்றை வலியுறுத்துகின்றது! இதே போன்ற வசனத்திற்கு 20:20ஐக் காணவும்.*